1982 மார்ச் 15]

கிண்டி குதிரைப்பந்தய மைதானத்திற்குள் ரகசிய சூதாட்டம்.

*வினா எண். 501—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி குதிரைப் பந்தய மைதானத்திற்குள் கள்ளத்தனமாக ரகசிய சூதாட்டம் (ரேஸ் பெட்டிங்ஸ்) நடத்தி அரசுக்கு வர வேண்டிய வரி ஏய்ப்பு செய்வதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : அனுமதிக்கப்படாத வகையில், சென்னை குதிரைப் பந்தய மைதானத்திற்குள் பணையம் வைத்து சூதாடுவதாக அரசிற்கு புகார்கள் ஏதும் வரவில்லை. சென்னை, குதிரைப் பந்தய மைதானத்திற்குள் வகை செய்யப்பட்டுள்ள அடைப்பிடத்திற்குள் அல்லாமல் வேறிடங்களில் யாராவது செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தில் சட்ட விரோதமான பெட்டிங் மூலம் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. சமீபத்தில் பத்திரிகையிலும் இது பற்றிய செய்தி வந்திருக்கிறது. இந்த புக்கிங் முறையில் பந்தயம் கட்ட பெரும் பணக்காரர்கள் கணக்கு இல்லாமல் சங்கேத மொழியில் 5, 500 என்று சொல்கிறார்கள். 2,500 ரூபாய்க்கு மேல் புக்கிங் கட்ட வேண்டியிருந்தால் வருமான வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக பந்தயம் கட்டுகிறவர்கள் ஒரே கார்டில் கட்டாமல் பல கார்டுகளில் புக்கிங் கட்டுவதால் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, என்னென்ன தவறுகள் செய்கிறார்கள் என்பதை அரசு கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அதையும் மீறி தவறு செய்வதற்கு இடமிருக்கிறது. அது பற்றி இன்றைக்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்து அதை ஒழிப்பதற்கு அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த குதிரைப் பந்தயங்களில் ஓனர், ட்ரெயினர், ஜாக்கிகள் சேர்ந்து கொண்டு மோசடி செய்வதும், அப்பாவி மக்கள் பணத்தை கபளீ

கரம் செய்வதும் அரசுக்குத் தெரியுமா ? நேற்று கூட இந்த சம்பவம் நடந்திருக்கிறது. இந்த குதிரைப் பந்தயத்தை லண்டன் மாநகரில் நாய்களை வைத்து குதிரைகளை ஓட்டுகிறார்கள். அதைப் போல இங்கேயும் ஜாக்கிகள் இல்லாமல் குதிரைகள் ஓட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அப்பாவி மனிதர்களை அவர்கள் எப்படியும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அவர்கள் யாரும் அங்கே போவதில்லை. விளையாடுவதற்கு வசதி படைத்தவர்கள் தான் அங்கே போகிறார்கள். சிலர் ஏமாற்றப்படுகிறார்கள் என்றால் அவர்கள் அங்கே போகாமல் இருப்பதுதான் நல்லது. இது அவசியமானது, அத்தியாவசியமானது அல்ல, அங்கே போகிறவர்கள் வீட்டிலே இருந்து வேலை பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, சூதாட்டத்தில் நம்பிக்கை இல்லை என்று கூறும் இந்த அரசு 'ஆஃப் கோர்ஸ் பெட்டிங்' என்ற சூதாட்டத்தை கண்காணித்து வருவதற்குப் பதிலாக இந்த சூதாட்டத்தையே இல்லாமல் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்களை ஒழிக்க வேண்டியது மக்களாட்சியினுடைய கொள்கைதான் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இங்கே நாம் குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டால் இங்குள்ள மக்கள் ஹைதராபாத்திற்கும் பெங்களூருக்கும் போய்விடுவார்கள். அதனால் நமக்கு வருமானம் குறைகின்ற நிலைமைதான் ஏற்படும். ஆகவே சுற்றிலும் நடந்துகொண்டிருக்கின்றது இருந்தாலும் அதை ஒழிக்கப்போவதில்லை என்று அரசு எண்ணவில்லை அதைப் பற்றிதீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, ஒரு இடத்திலே குதிரைப்பந்தயத்தை ஒழித்து விட்டால் மற்ற இடங்களுக்கு போவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் ஊட்டியிலே குதிரைப் பந்தயம் நடத்தப்படுகின்றது. அதற்கு மற்ற வெளி மாநிலங்களிலிருந்தெல்லாம் வருகின்றார்கள். மேலும் நம்முடைய ஏழை எளிய மக்கள் இந்தக் குதிரைப் பந்தயத்திற்கு தினசரி போவதை ஒரு பழக்கமாகக் கொள்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே இதைத் தடுக்க அரசு முன்வருமா ?

1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர வர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, ஏழை எளியவர்கள் ஏன் அங்கே போகிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் போகாமல் இருப்பதற் காக நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்களை ஆசிரியர்கள் வரிசைகளில் சேர்க்கும் செயற்குறிப்பு.

*வினா எண் 502—**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கல்லூரிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்களை ஆசிரியர்கள் (Teaching Staff) வரிசையில் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர்களுக்கு வழங்கும் ஊதிய விகிதத்தை (ரூ. 700-40—1,100-50-1,300-EB 50—1,600) போலவே கலைக் கல்லூரியில் பணிபுரியும் உடற் பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்களுக்கும் விரிவு படுத்தலாமா என்பதைப்பற்றி மத்திய அரசுடன் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடற் பயிற்சி இயக்குநர் பதவியினை யும் நூலக ஆசிரியர் பதவியினையும் உதவிப் பேராசிரியர் பதவிக்கு உயர்த்தி அதற்குரிய சலுகைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக வைக்கப்பட்டும் இன்றுவரை அது நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இந்த கோரிக்கையினை இந்த அரசால் எப்போது நிறைவேற்ற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்தப் பதவி உயர்த்தப்படுகின்றபோது ஏற்படுகின்ற செலவினத் தில் 80 சதவீதத்தை 5 வருடத்திற்கு மத்திய அரசுதான் தர வேண்டும். அவர்கள் தருவதற்கு ஒப்புக்கொண்டால்தான் முடியும். ஆகவே அவர்களிடத்திலே சொல்லி நாம் இதை ஏற்றுக்கொண் டிருக்கிறோம் என்பதையும் சொல்லி அதன்பிறகு அவர்கள் இதனை நடைமுறைப்படுத்தலாம் என்று கூறியதற்கு பிறகு அமுலுக்கு வரும். இப்போதுதான் நம்முடைய ஒப்புதலைத்